'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVII | மே கி.பி. 2026 | சான்று : 197




தேர்தல் - உண்ணாநோன்பு ஜெபம்

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

நேர்மையுடன் நடக்கும் என் அடியார் நம்பிக்கையினால் வாழ்வு அடைவார். எவராவது பின்வாங்கிச் செல்வார் என்றால் அவரில் நான் மகிழ்ச்சியுறேன் (எபி 10:38) என்று கடவுள் நம்மை நோக்கிக் கூறுகிறார். எனவே கடவுளது அன்பில் நிலைத்திருங்கள். என்றுமுள்ள நிலை வாழ்வைப் பெற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை எதிர்பார்த்திருங்கள் (யூதா 21) என்று வாழ்த்துகிறேன். செபிக்கிறேன். ஒருவர் ஒருவருக்காய் நிலைத்திருத்தலில் உறுதி பெற செபிப்போம்.

சில வான தூதர்கள் பின்வாங்கி சென்றதால் என்றும் கட்டப்பட்டவர்களாய் மாபெரும் தீர்ப்பு நாளுக்காகக் காரிருளில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் (யூதா 6) என்பதை அறிந்திருக்கிறோம். நீங்கள் எதிர்நோக்குவது முழு உறுதி பெறும் பொருட்டு, உங்களுள் ஒவ்வொருவரும் முன்பு காட்டிய அதே ஆர்வத்தையே இறுதிவரை காட்ட வேண்டும் என மிகவும் விரும்புகிறோம் (எபி 6:11) என்று எபிரேயருக்கு எழுதிய ஆசிரியர் கூறுவதையே பணிக்குடும்பம் நம் அனைவரிடமும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறது. முழு ஆர்வத்தோடு தான் அர்ப்பணம் ஏற்றோம். ஆனால் பலரின் செயல்பாடுகள் பின்வாங்கி செல்லுதல் என்ற நோயின் அறிகுறிகளைத் தாங்கி நிற்பது மறுக்க முடியாத உண்மை. பணியில் ஈடுபாடின்மை, தான் உணர்ந்து விரும்பி ஏற்றுக் கொண்ட கடமைகளை செய்யாதிருத்தல், ஆர்வமின்மை போன்றவற்றோடு, பணியாளர் வாழ்வில் உள்ளுயிர் தொடர்ந்து குறைவுபட்டு நிற்பது கண்கூடு. இது கட்டாயப் பணியல்ல. தன்னார்வப் பணி. கடவுளின் மாபெரும் அழைப்பால் இதில் இணைந்திருக்கிறோம். இதில் உள்ள பொறுப்புக்கள், கடமைகள், வாழ்க்கை முறைகள் அனைத்தும் முறையாக விளக்கப்பட்டும் இந்த அர்ப்பணத் தளர்வு ஏற்பட்டுள்ளது. எனவே தூய ஆவியாரின் தூண்டுதலின் பேரில் உண்மையான தன்னார்வ நற்செய்தி பணியாளர்களாகத் தொடர்வதற்கு இந்த இயக்கம், நற்செய்தி பணியாளர் ஆய்வு மற்றும் மறு அர்ப்பணம் என்ற செயல்பாட்டை முன்னெடுக்கவிருக்கிறது. இதில் திறந்த மனதோடு கலந்து கொண்டு அர்ப்பணத்தில் நிலைத்திருக்க நம் பணி குடும்பம் முழுவதையும் மிகுந்த பாசத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

அர்ப்பணிப்பு என்பது தான் வாழ்வில் முக்கியமானது என்று நம்பும் ஒன்றிற்காக தனது ஆற்றல், காலம், முயற்சி, உடல், பொருள், ஆவி முதலியவற்றை இறை ஈடுபாட்டோடு சரணடைந்து வாழ்வது அல்லது ஒப்புக்கொடுத்து வாழ்வதாகும். நற்செய்திப் பணியாளர் வாழ்வில் அர்ப்பணம் ஒரு அசைக்க முடியாத ஆழ்ந்த நம்பிக்கையின் செயலாக, ஆண்டவரின் சாயலைப் பிரதிபலிப்பதாக அவரது உருவாக மாற்றம் பெறும் முயற்சியாக, அவரது மாட்சியை வெளிப்படுத்தும் இலக்காக கருதப்படுகிறது.

ஒரு நற்செய்திப்பணியாளர் தன்னை கடவுளுக்கு, இறை பணிக்கு அர்ப்பணிக்கும் போது தன் சுயத்தை இழந்தவராக, இனி நான் அல்ல நீரே என் வாழ்வின் எல்லாம் என்று தன்னை முற்றிலுமாய் கடவுளின் திருவுளத்திற்கும், திட்டத்திற்கும் அவரில் முழுமை பெறுவதற்கும் ஒப்பிவிப்பதையே உண்மையான அர்ப்பணம் எனலாம். இன்று நம்மைப் பார்த்து' முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை' (திவெ 2:4) என்று கடவுள் சொல்கிறார். நீ அர்ப்பணம் பெற்ற போது உன்னிடம் இருந்த அன்பு, பணி செய்ய வேண்டும் என்ற துடிப்பு, கடமைகள் பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற தாகம் இப்போது இல்லை என்று கூறுகிறார். அதை மீண்டும் கொண்டுவரக்கூடிய முயற்சிகளைத்தான் பணிக்குடும்பம் மறு அர்ப்பணம் என்ற செயல்பாடு மூலம் செய்ய இருக்கிறது.

நற்செய்திப் பணியாளர் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்த, நமக்கு நன்கு அறிமுகமான சில திருவிவிலிய மாந்தர்களை நமக்கே நாம் நினைவூட்டிக் கொண்டு நாமும் அதன்படி வாழ ஊக்குவிப்பதே இந்த செய்தியின் நோக்கம்.

**ஆபிரகாமின் அர்ப்பணம்:**

ஆபிரகாம் தம் சொந்த நாடாகிய மெசப்பொத்தாமியாவில் சொந்த மக்களுடன், உறவுகளுடன் எல்லா செல்வ செழிப்புடனும் வசதி வாய்ப்புடனும் வாழ்ந்து வந்தார் . அந்தக் காலகட்டங்களில் வேற்று தெய்வ வழிபாட்டில் இருந்தார்(யோசு 24: 2) அந்த நாள்களில் உண்மை கடவுளை அறியாதிருந்தார். அப்போது மாட்சிமிகு கடவுள் அவருக்குத் தோன்றி 'நீ உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு செல் 'திப 7: 2, 3) என்று அழைப்பு கொடுத்தார். கடவுள் யார் என்று அறியாத சூழ்நிலையிலும் அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து அவரது அழைப்பை ஏற்று அசைக்க முடியாத நம்பிக்கையோடு புறப்பட்டார். ஆனால் அவர் பயணத்தை தொடராமல் காரன் என்ற இடத்தில் தங்கிவிட்டார் (தொநூ 11:31). இப்பொழுது அதே அழைப்பை கட்டளையாக மாற்றுகிறார். 'நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு செல்' என்று கடவுள் கட்டளை இடுகிறார். ஆண்டவர் ஆபிரகாமிடம் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார் (தொநூ 12:1,4) இது மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! முன்பின் அறியாத கடவுளுடைய கட்டளையை ஏற்றுத் தெரியாத இடத்திற்கு ஆபிரகாமை புறப்படச் செய்தது முழுமையான அர்ப்பணிப்பு இல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

'உன் மகனை நீ அன்பு கூறும் உன் ஒரே மகனான ஈசாக்கை, மோரியா நிலப்பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு நான் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரிபலியாக அவனை பலியிட வேண்டும்' (தொநூ 22 :2) என்று கடவுள் சொன்னதும் அதற்கு முற்றிலும் கீழ்படிந்து எந்தக் கேள்வியும் கேட்காமல் தன் மனைவியிடம் மட்டுமல்ல தன் மகனிடமும் எந்த விவரத்தையும் கூறாமல் புறப்பட்டார். தன் மகன்' நெருப்பும் விறகு கட்டைகளும் இருக்கின்றன.

எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?' என்று கேட்டபோது கடவுளே பார்த்துக் கொள்வார் (தொநூ 22:7-8) என்று சொன்னது அதிசயக் தக்க அர்ப்பணிப்புக்கு இலக்கணமாக இருக்கிறதல்லவா? மிகச் சாதாரண சூழ்நிலைகளையும் வசதிகளையும் கூட கடவுளுக்காக விட்டுக்கொடுக்க தயங்குகிற நமக்கு, நல்ல நேரம், நல்ல நாள், முகூர்த்த நாள், சாதிய மனநிலை, மூடநம்பிக்கைகள் போன்றவற்றைக் கூட கடவுளுக்காக விட்டுக் கொடுக்க தயங்குகிற நமக்கு ஆபிரகாமின் அர்ப்பணிப்பு வாழ்வு மிகப் பெரிய சவாலாக இருக்கிறது அல்லவா? இன்னும் நிறைய விவிலிய மாந்தர்களை புனிதர்களை காண்பிக்கலாம். அடுத்த இதழில் இன்னும் ஒரு சிலரைக் காண்போம்.

கடவுளின் நல்ல வார்த்தைகளையும் வரவிருக்கும் உலகின் வல்லமையையும் சுவைத்த இவர்கள் நெறிபிறழ்துவிடின் இவர்களை மனமாற்றி மீண்டும் புத்துணர்வு பெறச் செய்வது அரிது (எபி 6:5) என்று எபிரேயருக்கு எழுதிய ஆசிரியர் கூறியிருக்கின்றார். எனினும் நாம் அனைவரும் பணிவாழ்வில் நிலைத்திருக்க ஒருவர் மற்றவருக்காய் செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## ஏப்ரல் 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -I தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 11.04.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 18 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -II பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 12.04.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -III காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 12.04.2026 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியில் நற்பணி M. சேவியர், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி V. செங்கோல் மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 12.04.2026 அன்று நடைபெற்றது. இதில் 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி. J. மேரிபுஷ்பம், நற்பணி. J. இரபேக்கா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 14.12.2025 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியை L. ஜோசப் இருதயம், நற்பணி M. சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 12.04.2026 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியில் நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 19.04.2026அன்று நடைபெற்றது. இதில் 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. செலின் பிரபா, நற்பணி J. அம்பிகா எலியாஸ், நற்பணி P.அமலோற்பவ ஆரோக்கியராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 19.04.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 26.04.2026 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 19.04.2026 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

ஏப்ரல் 2026

## கடந்த மாதச் செயல்பாடுகள்

✸01.04. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 33பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை J. அருள் இளங்கோ, நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி, நற்பணி இரா. அருள் பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸01.04.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 69 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி சார்லஸ், நற்பணி சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸11.04.2026 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸12.04, 2026 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி S. மேட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸12.04.2026 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✷12.04, 2026 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி தை, அமல்ராஜா ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷12.04.2026 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. நற்பணி M மரிய கிரகோரி, நற்பணி A.R.சூசைராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷14.04.2026 அன்று விரிவாக்க உள்ளூர்யிர்க் குழுக்கூட்டம் பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இதில் 65 பேர் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு பணிகளை திறனாய்வு செய்தனர். எதிர்வரும் கல்வி ஆண்டிற்கான செயல்திட்டம் வகுத்தனர்.

✷18.04.2026 அன்று தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான உண்ணாநோன்பு செபம் 23 வட்டாரங்களில் நடைபெற்றது. நற்செய்திப்பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு உண்ணாநோன்போடு செபித்தனர்.

✷18.04.2026 அன்று மங்களபுரம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி. S. சகாயராணி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷19.04.2026 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி M. லூயிஜான் போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷26.04.2026 அன்று தஞ்தாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி M.விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷26.04.2026 அன்று திருவாளூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி S. அந்தோனி பிரகாஷ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

✷26.04, 2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.



## ஒரு பணியாளரின் மன்றாட்டு



அன்புத் தந்தையே இறைவா!

ஆவியானவர் விழா கொண்டாட இருக்கும் நாங்கள், மற்ற திருவிழாக்களைப்போல இதையும் நினைக்காமல், உம் அன்பைப் பெற்றுக்கொள்ளும் வாசலாக(உரோ 5:5) ஆவியானவர் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு, தூய ஆவியார் காட்டும் நெறியிலே நடக்கவும் (கலா 5:25)கொடைகளுக்காக ஏங்குவதை விட கனி வாழ்வு வாழ்ந்திட(கலா 5:22,23) ஏங்குகிறவர்களாக வாழும் மன நிலை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதார்க்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். (உரோ 1:11)

புனித பவுலின் மேற்கூறிய இந்த வார்த்தைகள் பழைய மொழிபெயர்ப்பில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் அறிவாளிகளுக்கும் அறிவிலிகளுக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் என்று உள்ளது. கடன் என்பது மிகுந்த மனபாரத்தைக் கொண்டுவரும் கடன் வாங்கியவர்கள் குறித்த காலத்திற்குள் அதற்குரிய வட்டியைக் கொடுக்கத் தவறினால் கடன் கொடுத்தவர் வீடு தேடி வந்துவிடுவார்கள். வட்டியைக் கொடுப்பதற்கு இன்னொருவரிடம் கடன் வாங்குவார்கள். இப்படிக் கடன் அதிகரித்து எத்தனையோ குடும்பங்களில் கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டவர்கள் உண்டு. கடன் சுமை மிகவும் கொடூரமானது. ஆனால் புனித பவுல் யாரிடமும் கடன்பட்டிருக்க வில்லை. ஏனென்றால் அவர் என் நிலையிலும் மனநிறைவோடு வாழப் பயிற்சி பெற்றவர் (பிலி 4:11). ஆனால் கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதார்க்கும் அறிவாளிகளுக்கும் அறிவிலிகளுக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் என்கிறார் (உரோ 1:14) ஒரு சிலர் யாரிடமாவது சிறிது கடன் வாங்கினால் கூட அதைத் திருப்பிக் கொடுக்கும் வரை அதை நினைத்துக் கொண்டேயிருப்பார்கள் கடன் கொடுத்த நபரை கண்டதும் ஓடிப்போய் அதை திருப்பிக் கொடுப்பார்கள். புனித பவுலின் ஆர்வமும் இது போன்றதுதான். பிறருக்கு நற்செய்தியை அறிவிப்பது கடன்பட்டிருப்பது போல உணருகிறார். எனவேதான் உரோமையராகிய உங்களுக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டுமென ஆர்வம் கொண்டுள்ளேன் என்கிறார் (உரோ 1:15). இரண்டாவது அவர் கூறுவது நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்பட மாட்டேன் என்கிறார் (உரோ 1:16) முதலில் கடனாயியாருக்கிறேன் என்கிறார், இரண்டாவது வெட்கப்பட மாட்டேன் என்கிறார். ஏனென்றால் இயேசுவை ஏற்றுக்கொள்ள யூதர்கள் வெட்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களை மீட்க வரக்கூடிய மெசியா மிகப்பெரிய பேரரசராக வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் நம் ஆண்டவர் முற்றிலும் மாறுபட்டவராகத் தோன்றினார். அவர் பிறக்கும்போது அரசராகத்தான் பிறந்தார். யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று ஞானிகள் அவரைத் தேடி வந்தார்கள் (மத் 3:2). அவர் இறக்கும் போதும் அரசராகவே இறந்தார். நாசரேத்து இயேசு யூதர்களின் அரசர் என்று எழுதியிருந்தது (யோ 19:19). ஆனால் இந்த உண்மை அவர்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. எனவேதான் அவர் சிலுவையில் தொங்கினபோது நீர் யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள் என்று அவரைக் கேலி செய்தார்கள் (லூக் 23:37). இவ்வளவு கேவலமாக சிலுவையில் அறையப்பட்டவரை நாம் எப்படி அரசராக ஏற்றுக் கொள்வது என்று அவரைக் குறித்து யூதர்கள் வெட்கமடைந்தார்கள். அன்றைக்கு இந்தப் பின்னணியில்தான் பவுலும் இருந்தார். எனவேதான் இயேசுவை

அறிவித்தவர்களை அடித்து துன்புறுத்தி திருச்சபைகளையும் அழித்து வந்தார். (திப8:3) பின்பு ஆண்டவர் உயிரோடு இருப்பதை கண்டபோது அவர் முற்றிலும் மனம் மாறினார். இப்போது நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படமாட்டேன் என்று கூறியது மட்டுமல்ல. தன்னோடு இருந்த திமொத்தேயுவைப் பார்த்து நீ ஆண்டவருக்கு சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவையில்லை என்கிறார்(2 திமொ 1:8)

சிலுவையைப் பார்த்து வெட்கமடைந்த அவர் இப்போது அச்சிலுவை யூதருக்கு தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார் என்கிறார்(1 கொரி 1:23-24) சிலுவையைக் குறித்து வெட்கமடைந்த அவருக்குள் எத்துணைப் பெரிய மாற்றம்? கடனாளியாக இருக்கிறேன், வெட்கப்பட மாட்டேன் என்று கூறியவர் மூன்றாவதாக, இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு! என்கிறார் (1 கொரி 9:16). நிறைவாக அவர் கூறுவது நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன் இது அவ்வளவு எளிதான காரியமல்ல. பவுலுக்குள் வீசிய அந்த நற்செய்தி ஒளி அவரை இவ்வாறு மாற்றியது. எனவே தான் நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும் பலரை கிறிஸ்துவிடம் கொண்டு வர என்னை எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன். ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன் என்கிறார் (1 கொரி 9:22). மேலும் நம் ஒவ்வொருவரையும் பார்த்து, அவர் கூறுவது சகோதர சகோதரிகளே எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின (பிலி1:12). புனித பவுலின் இந்த அனுபவம் இன்றும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. நம் வாழ்விலும் எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாக இருந்தது என்று நாமும் சொல்வோமானால் அது எத்துணை அற்புதமானதாய் இருக்கும் என்று எண்ணிப்பார்ப்போம். எல்லாச் சூழலிலும் என் அருள் உனக்குப் போதும் என்று (2 கொரி 12:9) பவுலைத் தேற்றிய ஆண்டவர் நம்மோடும் இருக்கிறார் என்பதை நம்புவோம். நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்கக் கடனாளியாய் இருக்கிறேன் என்பதை உணர்வோம். புனித பவுலை வழிநடத்திய தூய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நம்மை அர்ப்பணிப்போம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| நான் மன்றாடினேன்; ஞானம் எனக்குக் கொடுக்கப் பட்டது. நான் இறைவனை வேண்டினேன்; ஞானத்தின் ஆவி என்மீது பொழியப்பட்டது. | **சாலமோனின் ஞானம் 7:7** |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்**

www.arulchandrunilayam.org

# இருவகை நியமங்கள்

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள மீட்பின் உறவை வெளிப்படுத்தும் தும் தத்துவ சிந்தனைகளில் இரண்டு வகையான நியமங்கள் முன் வைக்கப்படுகின்றன. 1.குரங்கு நியமம், 2. பூனை நியமம், இவை இரண்டும் மிகப்பெரிய வேறுபாட்டை கொண்ட கொள்கைகளாக உள்ளன.

**1.குரங்கு நியமம்:** குரங்கு தன் குட்டியைச் சுமந்து செல்வதை இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள மீட்பின் உறவுடன் ஒப்பிடுலாம். மரம் விட்டு மரம் தாவும் தாய்குரங்கின் அடிவயிற்றை குட்டியானது இறுக கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும். இதில் பாதுகாப்பு என்பது குட்டியின் கரங்களில் இருக்கிறது. வேகமாகத் தாவும் தாயை குட்டி விட்டுவிடுமாயின் அது தன் வாழ்வை இழந்து விடும்.

இந்த குரங்கு நியமம் மனிதன் மீட்பு நற்செயல்களை அடிப்படையாகக் கொண்டது எனப் போதிப்பது. மனிதன் நற்செயல்களை விட்டுவிட்டால் மீட்பு இல்லை. கட்டளைகளை கடைப்பிடித்து மீட்பு பெறுவது குரங்கு நியமத்துக்கு ஒப்பானது. உலகில் எவரும் கட்டளைகளை கடைபிடித்து நிறைவு அடையவில்லை.

**2.பூனை நியமம்:** பூனை தன் குட்டியைக் கவ்விச் செல்வதை இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள மீட்பின் உறவுடன் ஒப்பிடுலாம். குட்டி கைகளை சும்மா வைத்துக் கொண்டிருக்கும் தாய் பூனை தனது வாயால் குட்டியை கவ்விச் செல்லும். தனது தாய் பத்திரமாய் கொண்டு சேர்க்கும் என்ற முழு நம்பிக்கையுடன் குட்டி அமைதியாய் இருக்கும் குட்டியானது வழியில் விழுந்து விட்டால் அது தாயின் தவறு.

இந்த பூனை நியமம் மனிதனின் மீட்பு வெறும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது எனப் போதிப்பது. இந்த மீட்பின் ஏதாவது வீழ்ச்சி ஏற்படுமாயின் அது இறைவனைச் சார்ந்தது. இயேசு கிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கையால் மீட்பு பெறுவது பூனை நியமத்துக்கு ஒப்பானது. இதில் செயல்களுக்கு இடமில்லை

> 'இறை அருளாலேயே மீட்பு'. (எபே 2:8)

தூய பவுல் கிறிஸ்துவ மீட்பு பூனை நியமத்துக்கு ஒப்பானது என்கிறார். கடவுள் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார் (2திமோ 1:9) நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல மாறாக கடவுளின் அருளாலும் இரக்கத்தாலும் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் (தீத் 3:5-7). ஆகையால், எவரும் நான் என்னுடைய நற்செயல்களினால் விண்ணகம் வந்தேன் என்று கூற ஒரு துளி இடமும் அங்கே இருக்காது. இயேசுவின் பலிக்கு எந்த மனிதனின் செயலும் ஈடாகாது. ஆனால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் நற்செயல்கள் செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம். அதற்காக நாம் உலகில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

**உவமை:** தவசி என்பவர் நிலைவாழ்வு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பல நற்செயல்களைச் செய்து வந்தார். அவர் இறந்ததும் அவர் விண்ணகம் சென்றார். விண்ணக வாசலில் தூய பேதுருவை கண்டார். பேதுரு தவசியைப் பார்த்து நீர் விண்ணரசுக்குள் செல்லவேண்டுமானால் 100% மதிப்பெண்கள் பெறவேண்டும். ஆகவே நீர் செய்த எல்லா நற்செயல்களையும் சொல்லும் நான் ஒவ்வொன்றிற்கும்

ஒரு குறிப்பிட்ட மதிப்பெண்களைக் கொடுப்பேன். அப்படிக் கொடுக்கப்பட்ட மதிப்பெண்கள் 100 சதவீதம் ஆனவுடன் நீர் விண்ணரசுக்குள் செல்லலாம் என்று கூறினார்.

தவசி தான் செய்த நற்செயல்களைச் சொல்லத் தொடங்கினார். "நான் ஒரே மனைவியை உடையவன்; 50 ஆண்டுகள் அவளுடன் குடும்பம் நடத்தினேன். அவளுக்கு மனதளவில் கூட துரோகம் செய்ததில்லை" என்றார். அதற்கு பேதுரு 'ஓ மிகவும் நல்லது. அதற்கு 3 மதிப்பெண்' என்று கூறினார். "என்னது 3 மதிப்பெண் தானா?' என்று கேட்டுவிட்டு. 'நான் வாரம் தவறாமல் கோவிலுக்குச் சென்றேன். தவறாமல் காணிக்கையும் செலுத்தி வந்தேன்'. என்று கூறினார். அப்போது பேதுரு 'வாவ் நல்ல காரியம் அதற்கு ஒரு மதிப்பெண் தரலாம்" என்று கூறினார். 'என்னது ஒரு மதிப்பெண்தானா?' சரி இதற்காவது நீங்கள் அதிக மதிப்பெண்கள் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். "நான் ஒரு முதியோர் இல்லம் அமைத்து அதில் முதியோர்களை இலவசமாக பராமரித்தேன்' என்று கூறினார். அதற்கு பேதுரு 'சபாஷ் நற்செயல்' அதற்கு 2 மதிப்பெண் தரலாம் என்று கூறியபோது தவசி மிகவும் சத்தமிட்டு 'ஐயோ! என் வாழ்நாள் முழுவதும் நான் செய்த நன்மைகளுக்கு 6 மதிப்பெண்கள்தான் என்றால், என்னுடைய நற்செயல்களால் எனக்கு வாழ்வு இல்லை. "இறைஅருளால்தான் நான் வாழ்வு பெறமுடியும்" என்று கூறினார். அதைக்கேட்ட பேதுரு 'நீர் இப்போது உள்ளே செல்லலாம்' என்று கூறினார்.

இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவுள் நமக்கு நிலைவாழ்வை அருளியுள்ளார் (யோவா 3:36, 14:6, 1யோவா 5:11,12). நிலைவாழ்வு இயேசு கிறிஸ்துவிடம் உள்ளது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவா 3:16). ஆக இயேசுவின் அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல. மாறாக, இது கடவுளின் கொடை (2:4-9).

ஆகவே மனிதனின் நற்செயல்களும், தானதர்மங்களும் ஒரு நாளும் நிலைவாழ்வு பெற வழிவகுக்காது.

> 'இயேசுவின் மீது கொள்ளும் நம்பிக்கையே வாழ்வு'. (யோவா 3:16)

இறையருள் ஒன்றுதான் மனிதர்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி நிலைவாழ்வு பெற வழிவகுக்கிறது (உரோ 5:21). நாம் இறையருளால் மீட்கப்பட்டிருக்க நாம் செய்யும் நற்செயல்கள் நம்மை மீட்கும் என்று என்று எப்படிச் சொல்ல முடியும்! 'வழியும் உண்மையும் வாழ்வும் நானே' என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா 14:6, திப 4:12), 'வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்' (யோவா 10:10) என்று இயேசு ஆண்டவர் கூறிகிறார். ஆக, விண்ணரசின் வாழ்வைப் பெற நாம் நற்செயல்கள் செய்யவில்லை. விண்ணரசின் வாழ்வு நமக்கு அருளப்பட்டுள்ளதால் நாம் நற்செயல்களை செய்ய வேண்டும். ஆகவே இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் அவரைப்போல நன்மைகள் செய்து கடவுளின் மக்களாய் இருப்போம். நம் நற்செயல்களுக்கேற்ற பலனை இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது தருவார்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16)

இறை நம்பிக்கை என்பது இறைவனின் வழிகளில் நடப்பதால் நம் உள்ளத்தில் ஆன்மாவில் அனுபவிக்கும் இறைவனின் வல்லமையும் ஆற்றலும் தான். இதனையே தொடக்கத் திரு அவையில் வாழ்ந்த சீடர்களும் அவர்கள் அறிவித்த நற்செய்தியை நம்பி மனம் மாறியவர்களும் பெற்றிருந்தார்கள். அதனால் அவர்களிடம் பெரும் மகிழ்ச்சியும் மன உறுதியும் இருந்தன.

- நிலத்துடன் வேர் எந்த அளவிற்கு ஆழ ஊன்றி பக்கவாட்டில் விரிந்து பரவி ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கிறதோ அந்த அளவிற்குச் செடிகளும் மரங்களும் நிமிர்ந்து நின்று பலன் கொடுக்கும். அது போலவே நாமும் எந்த அளவிற்கு இறைவனோடு உள்ள உறவிலே இதயத்தால் ஆன்மாவால் இணைந்து இருக்கின்றோமோ அந்த அளவிற்குத் தான் நம்முடைய நம்பிக்கையில் நாம் நிலைத்து நிற்க முடியும்.

- நம்பிக்கை என்பது வாயினால் வெறும் அறிக்கை செய்வதோடு மட்டும் நிறைவு பெற்று விடாது.

விண்ணையும் மண்ணையும் உண்டாக்கின ஒரே இறைவனை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனான இயேசுக் கிறிஸ்துவை நம்புகிறேன் என்று தினந்தோறும் திருப்பலியின் போதும் எத்தனை முறை செபமாலை செபிக்கின்றோமோ அத்தனை முறையும் அறிக்கை செய்கின்றோம். ஆனால், உண்மையில் அதை செயலுக்கு கொண்டு வருகிறோமா?'என் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கின்றது; அவர்களது இறையச்சம் மனனம் செய்த வெறும் மனித கட்டளையைச் சார்ந்ததே'(எசா29:13). நாம் செய்யும் நம்பிக்கை அறிக்கையும் நம் அனுபவத்திலிருந்து வருவதில்லை. மாறாக, நாம் மனனம் செய்த செபமாகவே உதட்டிலிருந்து வருகின்றது. நாம் உணர்வுபூர்வமாக நம் இதயத்திலிருந்து நம் அனுபவத்திலிருந்து அறிக்கை செய்ய வேண்டும் என்று ஆண்டவர் நம்மிடம் விரும்புகின்றார். எதிர்பார்க்கின்றார்.

'கிறிஸ்து தான் திருச்சட்டத்தின் நிறைவு. அவர் மேல் நம்பிக்கை கொள்ளும் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவார்'(உரோ 10:4) கடவுள் மனிதர்களை கிறிஸ்து இயேசுவின் வழியாகத்தான் தமக்கு ஏற்புடையவர்களாக மாற்றுகின்றார். சட்டத்தின் நிறைவாக இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து இறை நம்பிக்கையில் வாழ்ந்து காட்டியவர் நம் ஆண்டவர்.'கடவுள் மனிதர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கும் முறையை அறிந்து கொள்ளாமல் யூதர்கள் தங்கள் முயற்சியாலேயே அவருக்கு ஏற்புடையவர்களாக முயன்றார்கள். ஆகவே அவர்கள் கடவுளின் செயல்முறைக்குத் தங்களை உட்படுத்தவில்லை(உரோ 10:3). கடவுள் மனிதர்களை கிறிஸ்து வழியாகத்தான் தமக்கு ஏற்புடையவர்களாக்குகின்றார் என்ற முறையை அறிந்து கொள்ளாததால்தான்

யூதர்கள் இயேசுவை நம்பி ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசுவின் செயல்களுக்கு சட்டத்தையே காரணமாகக் கூறி அவரை எதிர்த்து நின்றார்கள். இன்றைக்கு நாமும் மனிதர்களால் கற்பிக்கப்பட்ட காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உலகுசார்ந்த செயல்களைச் செய்வதனால் (பக்தி செயல்கள் உட்பட) இயேசுவின் மீது நம்பிக்கை இல்லாமல் அவரை எதிர்த்து நிற்கின்றோம்.

'தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்' (யோவா3:16). ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறுவர் என்ற வாக்குறுதியை நாம் உரிமையாக்கிக் கொள்ள நமது நம்பிக்கையைச் செயல் வடிவில் காட்ட வேண்டும். ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்பவர் தண்டனை தீர்ப்புக்கு ஆளாக மாட்டார்கள் (யோவா3:18). ஏனென்றால் அவர் மீது நம்பிக்கை கொள்வதால் நாம் மறுபடியும் பிறக்கின்ற அனுபவத்தைப் பெறுகின்றோம் .அந்த அனுபவத்தை பெறுவதால் நம்மில் புதிய மாற்றம் உண்டாகுகின்றது. இந்த உலகம் எதையெல்லாம் உயர்வாகவும், ஞானமாகவும், பெருமையாகவும் கருதுகின்றதோ அதனையெல்லாம் கடவுள் நம்பிக்கையாளர்கள் ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள்.

புனித பவுல் இறை நம்பிக்கையில் நிலைத்து நின்றதனால் தான் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே தான் பெரும் ஒப்பற்ற செல்வம் என்றும் மற்ற அனைத்தையும் குப்பை என்றும் கூறியிருக்கின்றார் (பிலி3:8). புனித பவுல் மட்டுமல்ல மற்ற சீடர்களும் எண்ணற்ற புனிதர்களும் தாங்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையை செயல்களில் காட்டியதால் தான் இன்று திரு அவை அவர்களை வணக்கத்துக்குரியவர்களாகக் கொண்டாடுகின்றது.

நாம் கொண்டுள்ள இறை நம்பிக்கையை நம் அன்றாட செயல்களில் வெளிப்படுத்தி வாழ்வோம். 'ஒருவரிடம் நம்பிக்கை இருப்பது போல் இன்னொருவரிடம் செயல்கள் இருக்கின்றன' என யாராவது சொல்லலாம். அதற்கு என் பதில் செயல்களின்றி எவ்வாறு நம்பிக்கை கொண்டிருக்க முடியும் என்று காட்டுங்கள். நானோ என் செயல்களின் அடிப்படையில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை உங்களுக்குக் காட்டுகிறேன்'(யாக் 2:18) என்று புனித யாக்கோபு தன் திருமுகத்தில் செயல்கள் தான் நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு அளவுகோல் என்கிறார். நம்பிக்கையில் நிலைத்து நிற்க தூய ஆவியாரின் துணை வேண்டுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

முத்திரை

**தூய ஆவியார் பெருவிழாத் திருவிழிப்புக் கொண்டாட்டம்**

**நாள் : 23 & 24 மே, 2026** சனிக்கிழமை & ஞாயிற்றுக்கிழமை

**நேரம் : இரவு 09.00 மணி முதல் ஞாயிறு அதிகாலை 05.00 மணி வரை**

**இடம் : ஆனந்தா அருங்கொடை மையம், தேவகோட்டை ரஸ்தா**

## திருவிவிலியமும் திருக்குறளும்

ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தாலும், ஊனியல்பின் நாட்டத்தாலும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்கள் வழியாக நாம் செய்த பாவங்களுக்காகவும் இவ்வுலகம் மீட்புப்பெறவும், கல்வாரி சிலுவையில் அறையுண்டு ஐம்பெருங்காயங்களால் இயேசு பலியானார்.

அவர் நம்மை மீட்டு கடவுளிடம் கொண்டுவந்து சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார். மனித இயல்போடு இருந்த அவர் இறந்தாரெனினும், ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர் பெற்று எழுந்து மாட்சியுடன் உள்ளார் (1பேது3:18).

திருக்குறளும் மேற்கண்ட விவிலிய கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார். (கடவுள் வாழ்த்து குரல் 6)

என்று குறள் எடுத்தியம்புகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் வாழ்வு நிலையானதாக அமையும். இப்பொருள் சிலுவையாகிய பொறியில் ஐந்து காயங்கள் வழியாக நாம் செய்த பாவங்களைக் கழுவி மீட்ட குற்றமில்லாத இயேசுவின் வழியில் நடப்போர் முடிவில்லாத நிலை வாழ்வைப்பெறுவர் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

– நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

## இது சாத்தியமா ?

புத்துயிர் செபத்தின்போது பெற்ற புத்தொளி இது.

இயேசுவின் உடலை அடக்கம் செய்த பின்னர் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலா மரியாவும், வேறொரு மரியாவும் கல்லறையை பார்க்கச் சென்றனர் (மத். 28).

கல்லறைக்கு செல்வதற்கு முன்னர் அந்த இரண்டு பெண்களிடமும் இந்த கேள்விகள் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். 1) கல்லறை ஒரு பெரிய பாறாங்கல்லினால் மூடப்பட்டு, அரசு முத்திரையிடப்பட்டு, காவலர்கள் காவல் செய்து வருகின்றனர். அந்த காவலர்களைத் தாண்டி கல்லறைக்கு செல்வது எப்படி? 2) அவ்வளவு பெரிய கல்லை பெண்களாகிய நாம் இருவர் மட்டும் புரட்டுவது எப்படி சாத்தியம்?

இது போன்ற கேள்விகள் பெண்கள் இருவருக்கும் வேதனையையும், சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், இயேசுவுக்கான தூய்மைச்சடங்கை நிறைவேற்றியே ஆக வேண்டும்; இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற உந்துதல் அவர்களை கல்லறை நோக்கி பயணிக்க வைத்தது.


என்னே ஆச்சரியம்! அவர்கள் கல்லறையை அடைந்தபோது கல் புரட்டப்பட்டிருந்தது.

நமக்குள்ளே சிறப்பான உந்துதலோடும், இயேசுவின் பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடும் பயணிக்கும் போது எதிர்கொள்ளும் தடைகள் உடைக்கின்றன எதிர்படும் கல் புரட்டப்படுவது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

# பணியாளர் குறுக்கெழுத்துப் போட்டி (01)

**ஏப்ரல்** மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்பட்டுள்ளது



**இடமிருந்து வலம்**

1 கிறிஸ்துவே முதலில் பெற்றார்
2 நற்செய்தியை நம்புகின்ற மனிதர் இது உண்டு என்பதை அறிந்துகொள்கிறார்
4 தமக்கு ஏற்புடையரானவரை தம் எதில் பங்குபெற செய்தார்
5 12 சீடர்களுள் யார் குறிப்பிடத்தக்கவர்?
7 ஆண்டவர் அனைத்தையும் வெற்றிபெறச்செய்வார் ஏனெனில் அவரே நம்
8 நம்மிடம் எது கலந்த நம்பிக்கை இல்லை
9 ஆலோசனைத்துறையில் என்பது ஒரு முக்கிய சிறு திறன் ஆகும்
13 என் நியமங்களை ஏற்று என் ஆணைகளுக்கு எவ்வாறு நடங்கள் என்று கூறுகிறார்
15 உமக்காக உழைப்பது வீண்போகாது எண்பதை அறிந்து இதை இன்னும் அதிகமாக செய்திட வேண்டும்

**மேலிருந்து கீழ்**

3 இயேசுகிறிஸ்துவின் நிறைவான எதற்கு நம்மை கொண்டுசெல்வது கடவுளின் இறுதியான நோக்கமாகும்
6 ஒருவர் இறைவனோடு இருக்கும் போது அவர் எத்தனைப் பேருக்கு சம மாகிறார்
10 மனமுவந்து நீங்கள் எனக்கு எப்படி நடந்தால் நாட்டின் நற்கனிகளை உண்பீர்கள்
11 புனித ஜுலி பில்லியார்ட் எந்த வார்த்தைப்பாட்டை தானே ஏற்றுக்கொண்டார்
12 என் அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்
14 என்னைக் காண்பது யாரைக் காண்பதாகும்?

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு புத்தகத்தில் இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்
3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/- நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் இரண்டு பேருக்கு பரிசுத்தொகை பிரித்துக் கொடுக்கப்படும்.

# கிறிஸ்தவ சாதி ?

அறிவை முன்னிருத்தும்போது நமது நம்பிக்கை கேள்விக்குறியதாகிறது. கடவுள் பெயரை கூறிக்கொண்டிருப்பவர்கள் கூட பிரிவினை சிந்தனையில் இருந்து விடுபட முடிவதில்லை. இங்கு சாதிய பிரிவினை இருக்கிறது மற்ற இடங்களில் நிற வேறுபாடு இருக்கிறது என்று சிலர் தங்களைத்தானே சமாதானப்படுத்திக் கொள்கின்றனர். கடவுள் எண்ணத்தில் பிரிவினை உள்ளதா? என்று ஆய்ந்து பார்த்தால், இல்லை என்று உறுதியான பதில் கிடைக்கிறது. கடவுள் மனிதனின் தீய சிந்தனையை முறியடிக்க சினயார் நாட்டில் இருந்தபோது அவனுக்குள் மொழிப்பிளவை ஏற்படுத்தி உலகம் முழுவதும் சிதறுண்டு போகச்செய்தார். (தொநூ 11:1-9).

கடவுள் மனிதரை நிறத்தை வைத்தும் பிறப்பை வைத்தும் தாழ்வாக பார்த்தது இல்லை. ஒரு தாய் தேற்றுவது போல் நான் உன்னைத் தேற்றுவேன் என்று கூறியவர். மானிடராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்குள் பிரிவினை பார்க்க முற்படாதபோது அவர் பிரிவினை பார்ப்பாரா?. சனதானம் எனும் சாதிய பிரிவினையை தூக்கி பிடிக்கும் இந்து மதத்தில் உள்ள கடவுள்கள் கூட மனிதன் உருவாக்கிய சாதி பார்க்காமல் அனைத்து சாதிய மனிதரையும் ஆழ்வார்களாகவும், நாயன்மார்களாகவும் தேர்ந்தெடுத்துள்ளதாக அறிகிறோம் முஸ்லீம் மதத்தில் நிறப்பாகுபாட்டில் கருப்பினத்தவராகவும் வாழ்க்கையில் அடிமை வாழ்வும் வாழ்ந்த பிலால் முதன்மைப் படுத்தப்படுகிறார்.

பாகுபாடு பார்ப்பது குறித்து கிறிஸ்தவம் மதம் என்ன சொல்கிறது? தன்னை பெரியவனாக காட்டிக்கொள்ள மனிதனின் முயற்சிதான் சாதி. ஆனால் நாம் நம்பும் கடவுள் ஆள் பார்த்து செயல்படாதவர் (உரோ 2:11) அவர் தண்டனைத் தீர்ப்பில் மாசற்றவாராக இருக்கிறார் (திபா 51:4). எனவேதான் யாக்கோபு அழைப்பு விடுக்கிறார். என் சகோதர சகோதரிகளே, மாட்சிமிக்க நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிடம் நம்பிக்கை கொண்டுள்ள நீங்கள் ஆள் பார்த்துச் செயல்படாதீர்கள் என்கிறார் (யாக்2:1). எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர் (திபா 10:35). நாம் கடவுளுக்கு ஏற்புடையவராவதில் கவனம் செலுத்துவோம். மனிதனை உயர்வாக்குவது சாதி அல்ல. இறை பயம் மற்றும் நல்வழிதான். கிறிஸ்துவில் நாம் ஒன்றாக இருக்கிறோம் என்றால் சமூகத்திலும் ஒன்றாக இருக்க வேண்டும் பேதுரு. கொர்னேலியுவையும் அவர் உறவினர்களையும் பார்த்து, 'ஒரு யூதன் பிற குலத்தவரிடம் செல்வதும், அவர்களோடு உறவாடுவதும் முறைகேடு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், யாரையம் தீட்டுள்ளவர் என்றோ, தூய்மையற்றவர் என்றோ சொல்லக்கூடாது' எனக் கடவுள் எனக்குக் காட்டினார் என்று கூறுகிறார். அதற்கு முன் யூதர்கள் மட்டுமே கடவுளுக்கு ஏற்புடையவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணத்தை மாற்றவே அனைவர் மீதும் கடவுள் தூய ஆவியைப் பொழந்தருளினார். எனவே இங்கு சாதியின் பெயரால் பாகுபாடு பார்ப்பவர்கள் விண்ணரசில் ஒதுக்கபடுவர் என்பதை உணர்வோம்.

இதோ ஒரு சுய பரிசோதனை. உங்கள் பதில் ஆம், இல்லை என்று எழுதுங்கள்.

1. நம்பிக்கையில் ஒன்றாக இருக்கிறோம். ஆனால் நடைமுறையில் பிரிவுகளை வைத்திருக்கிறோமா?
2. ஒருவரை முதலில் பார்க்கும்போது, அவர் எந்த சாதி என்று அரியத் துடிக்கிறேனா?
3. சில சாதி மக்கள் 'உயர்ந்தவர்கள்' என்று நினைக்கிறேனா?
4. சில சாதி மக்களுடன் பழகும்போது இடைவெளி உள்ளதா?
5. என் சாதியை நான் பெருமையாக நினைக்கிறேனா ?
6. நம்ம சாதி என்ற அடையாளம் எனக்கு முக்கியமா?
7. நான் நண்பர்களைத தேர்வு செய்யும் போது சாதி தாக்கம் உண்டா?

8. மாற்று சாதி வீட்டில் சாப்பிடத் தயக்கம் இருக்கிறதா?
9. என் வீட்டுக்கு எல்லா சாதி மக்களையும் சமமாக அழைக்கிறேனா?
10. பொதுவாக சில சமூகத்தவருடன் அதிகமாக பழகுவதை தவிர்க்கிறேனா?
11. யாரோ ஒருவர் சாதி காரணமாக புறக்கணிக்கப்படும்போது நான் அமைதியாக இருக்கிறேனா?
12. என் குடும்பத்தில் 'நம் சாதிக்குள்ளே தான் கல்யாணம்' என்ற எதிர்பார்ப்பு இருக்கிறாதா?
13. நான் வேறு இரு சாதிக்குள்ளான திருமணத்தை மனதில் ஏற்க முடியாமல் இருக்கிறேனா?
14. வாழ்க்கைத் துணையை தேர்வு செய்யும்போது சாதி ஒரு முக்கிய காரணியா?
15. 'மற்ற சாதியில் கல்யாணம் செய்தால் பிரச்சனை வரும்' என்று நினைக்கிறேனா?
16. கோவிலில், களப்பணியில் எல்லோரையும் சமமாக பார்க்கிறேனா?
17. தலைமை பொறுப்பில் யார் இருக்க வேண்டும் என்று நினைக்கும்போது சாதி என் கண் முன் வருகிறதா?
18. 'இந்த வேலைக்கு இந்த சாதி மக்கள் தான் சரி' என்று நினைக்கிறேனா?
19. சிலருடன் சேர்ந்து அமர அல்லது வேலை செய்ய தயக்கம் இருக்கிறதா?
20. சாதி பற்றி பேசும்போது நான் பாதுகாப்பாக உணர்கிறேனா?
21. என் சாதியைச் சேர்ந்தவர்கள் சிறிய செயலையும் பாராட்டிவிட்டு பிற சாதியினரின் பெரிய செயலையும் பாராட்ட தயங்குகிறேனா?

---

**மதிப்பீடு**

- 0-3' ஆம்' --> நல்ல சமத்துவ மனப்பாங்கு
- 4-8' ஆம்' --> கவனிக்க வேண்டிய பகுதி
- 9-15' ஆம்' --> ஜாதி தாக்கம் தெளிவாக உள்ளது
- 16க்கு மேல் மாற்றம் அவசியம்

---

இந்த கேள்விகள் குற்றம் காண அல்ல. மாறாக சுய ஆய்விற்கும் மாற்றம் பெறுவதற்கு மட்டுமே.

கிறிஸ்துவில் சாதி இல்லை கிறிஸ்தவத்தில் சாதி இல்லை என்று முழக்கமிட்டு வாழ்வோம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

## விரும்பியவர்களை வாழ வைக்கிறார்

தந்தை இறந்தோரை எழுப்பி அவர்களை வாழ வைப்பது போல மகனும் தாம் விரும்பியவர்களை வாழ வைக்கிறார்' (யோவா 5:21)

இயேசு (மகன்) விரும்பியவர்களை வாழவைக்க என்ன செய்கிறார்?

1. தம்மிடம் வரவழைத்தார்
2. தம்மோடு இருக்க ஆசிக்கிறார்.
3. அனுப்புகிறார். (மாற் 3:13-14)

இயேசு விரும்பியவர்களை வாழ வைக்க வேண்டுமெனில் முதலில் அவரோடு இணைந்திருக்க ஆவல் கொள்ள வேண்டும். திராட்சைக் கொடி, செடியோடு இணைந்திருப்பது போல் உயிரோட்டமுள்ள உறவால் இணைந்திருக்க வேண்டும். (யோவா 15:4). அப்போது நாம் வாழ்வோம்; கனிதருவோம்

(யோவா 15:5). இயேசுவின் உண்மையான சீடர்கள் அவரோடு உறவில் ஒன்றித்து, அவரது அனுபவத்தைப் பெறுவார்கள். இந்த அனுபவம் நம்மை வாழ வைக்கும் அனுபவம்.

இரண்டாவது, அவரால் அனுப்பப்பட வேண்டும். அனுப்பப்படல் என்றால் அவர் விரும்புகிற பணியை ஆற்ற தாளராத உள்ளத்தோடு செல்ல வேண்டும். நமக்கு விருப்பமில்லாத இடமாக இருக்கலாம், வசதியற்ற காலமாக இருக்கலாம். இருப்பினும் நாம் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும்போது எனக்குப் பேர், புகழ் கிடைக்க வேண்டுமென்றோ, பலன் கிடைக்கும் என்றோ எண்ணி செல்லக் கூடாது. மாறாக புனித பவுல் குறிப்பிடுவது போல், 'நீயோ அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு: துன்பத்தை ஏற்றுக்கொள்: நற்செய்தியாளனின் பணியை ஆற்று: உன் திருத்தொண்டை முழுமையாய்ச் செய்' (2 திமொ 4:5) என்ற வார்த்தை நம்மை வழிநடத்த வேண்டும் அப்போது நாம் நேரிய வாழ்வுக்கான வெற்றிக் வாகையை (2 திமொ 4:8) இறுதி நாளில் பெற்றுக்கொண்டு அவரால் வாழ வைக்கப்டுவோம்.

நற்பணி.**ஜான் போஸ்கோ.**

மே 2026

## புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 30.05.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி GMS. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 31.05.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. கரோலின் எமிலி |
| 31.05.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி P. சகாயராணி |
| 31.05.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ.தெரசா மிராண்டா |
| 31.05.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி G. மிக்கேல்பிரபாகர் |
| 31.05.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 31.05.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி P.அமலோற்பவ ஆரோக்கியராணி |
| 31.05.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 31.05.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் |
| 31.05.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி A. ஜான்சிமேரி |
| 31.05.26 | செங்கோல்மாதா கோவில் காராங்காடு | நற்பணி A. தனிநாயகம்<br>நற்பணி S. கான்ஸ்டன்சியா |

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.05.26 | நற்பணி மோட்ச அலங்காரம் இல்ல முதல் திருவிருந்துவிழா | இளையான்குடி |
| 2.5.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 3.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி காளையார்கோவில் |
| 6.5.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 09.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம்,<br>திரு இருதய ஆண்டவர் கோவில் மாந்தை |
| 10.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புதுக்கோட்டை, இராமநாதபுரம், புதலூர் சிவகங்கை, ஓரியூர். பட்டுக்கோட்டை |
| 16.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | மங்களபுரம், திருமயம் |
| 17.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | காயாவயல், சாயல்குடி.<br>சி.கே. மங்கலம், அம்மாபேட்டை தஞ்சாவூர் |
| 23.5.26 | நற்பணி S.சகாயலூயிஆரோக்கியசாமி & நற்பணி M. கிரேஸ்மேரி இல்ல திருமண அருளடையாள உறுதிப்படுத்தும் விழா | சருகணி |
| 23.5.26 | முத்திரை<br>தூய ஆவியார்<br>திருவிழிப்புக் கூடுகை | ஆனந்தா அருங்கொடை மையம்,<br>தேவகோட்டை. ரஸ்தா |
| 30.05.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழநதை தெரசாள் ஆலயம் தங்கச்சிமடம் |
| 31.5.26 | அறிமுகப்பயிற்சி | பரமக்குடி, காயையார்கோவில்.<br>சிவகங்கை, சாயல்குடி, இராமநாதபுரம்.<br>அமைதியகம். சி.கே. மங்கலம்,<br>ஆர்.எஸ் மங்கலம். ஓரியூர் |
| 31.5.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | திருவாரூர், நமணசமுத்திரம,<br>கோட்டைகாடு, இராஜசிங்க மங்கலம் |

# புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 03.05.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி J. மேரிபுஷ்பம் |
| 03.05.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி G. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி P. சகாயராணி |
| 9.05.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 10.05.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி G. ஜெனிபர்<br>நற்பணி பெ.தெரசா மிராண்டா |
| 10.05.26 | வியான்னி அருள்பணிமையயம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி M. சேவியர் |
| 10.05.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. ஜான்சிமேரி |
| 17.05.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி S. சகாயராணி |
| 17.05.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 17.05.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் |
| 31.05.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. அருள்இளங்கோ<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

**பாத்திரத்தின் வடிவத்தில் தண்ணீர் இருப்பது போல் சூழலுக்கேற்ப பிடிவாதம் தவிர்த்து வளைந்து கொடுப்போம்....**

**மகிழ்ச்சி என்றும் நம் கையில்..**

-எல்லாரோ

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும்; வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. (பிலி 4:12,13)

# தஞ்சை மறைமாவட்ட புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையயம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 09.05.26<br>II | திரு இருதய ஆண்டவர் கோவில், மாந்தை | நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9787037717 |
| 10.5.26<br>II | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி GMS. ராணி<br>9655264448<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762 |
| 10.05.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 10.05.26<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி A. சகாயராஜா<br>943569152<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |
| 16.05.26 | லூர்து அன்னை கோவில் மங்களபுரம் | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>978703717 |
| 16.05.26 | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. அந்தோணிபிரகாஷ் |
| 17.5.26<br>III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | செயலர்<br>9787967272<br>நற்பணி S. பால்ராஜ்<br>9789077287 |
| 17.05.26<br>III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260<br>நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 31.05.26<br>V | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9787037717 |
| 31.05.26<br>V | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>8270140484<br>நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ |
| 31.05.26<br>V | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | 9443503618<br>நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799<br>நற்பணி தை. அமல்ராஜா |

# புனித பிலிப்பு நேரி (மே 26)

மனிதர் தாம் உயிரோடுருக்கும் போது, இன்பம் துய்த்து மகிழ்வதைவிட சிறந்தது அவருக்கு வேறொன்றும் இல்லை என அறிந்துகொண்டேன் (சஉ 3:12)



கி.பி 1515 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 21 ஆம் நாள் இத்தாலியில் உள்ள பிளாரன்ஸ் என்ற நகரில் பிலிப்புநேரி பிறந்தார். இவருடைய குடும்பம் செல்வச் செழிப்பான குடும்பம். இவர் தன்னுடைய பதினெட்டாவது வயதில் தான் செய்துவந்த வணிகத் தொழிலை விட்டுவிட்டு உரோமை நகருக்குச் சென்றார்.

உரோமை நகரில் இருந்த ஒரு பணக்காரர் மகனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து, அவருடைய வீட்டில் தங்கியிருந்தார்.

தன்னை நாடிவரும் மக்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்தார். பிலிப்புநேரி நோயாளிகளைச் சந்தித்து, அவர்களை திடப்படுத்தினார் கி.பி 1538 39 ஆம் ஆண்டுகளில் உரோமை நகரில் ஏற்பட்ட கடும்பஞ்சத்தில் ஏழை எளியவருக்கு உதவிசெய்து பெருந்தொண்டாற்றினார்.

இவருடைய பணிகளைப் பார்த்த அருள்தந்தை பெர்சியோனா ரோசா இவரை குருத்துவ பயிற்சிக்கு அனுப்பினார். கி.பி 1551 ஆம் ஆண்டு இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார், இவர் இளைஞர்களை மறைஅறிவில் வளர்த்தெடுத்தார். செபக்குழுக்களை ஏற்படுத்தி அன்மீகத்தில் மக்களை வளர்த்தெடுத்தார்.

ஒப்புரவு அருட்சாதனத்திற்கும், நற்கருணைக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கி மக்களை ஆன்மீக வழியில்ல நடத்திச் சென்றார்.

இவர் நிறைவேற்றும் திருப்பலியில் கலந்துகொள்ளும் ஒருவர் திவ்ய நற்கருணையை உட்கொண்ட உடனேயே தன்னுடைய அலுவலகத்திற்கு சென்று விடுவார். இதனைக் கவனித்த பிலிப்புநேரி ,அந்த இளைஞர் திவ்ய நற்கருணையை வாங்கி உட்கொண்டு உடனே வெளியே சென்ற போது, பிலிப்புநேரி பீடச் சிறுவர்களை அழைத்து, மெழுகுதிரிகளை ஏந்திக்கொண்டு அவர் பின்னால் நடக்கச் சொன்னார். இதைப் பார்த்த அந்த இளைஞர் தன்னுடைய குற்றத்தை உணர்ந்து, அதன்பிறகு நற்கருணை வாங்கிய பின் வெளியே செல்வதை தவசிர்த்தார்.

இவர் மக்களுக்கு ஆலோசனை கூறும் திறமையைப் பார்த்து ஆயர்கள். கர்தினால்கள் முதற்கொண்டு இவரிடம் ஆலோசனை கேட்கவந்தார்கள், அதன்மூலம் இவருக்கு தூய லயோலா இஞ்ஞாசியாரும் தூய சார்லஸ் பொரோமேயு போன்ற பல நண்பர்கள் கிடைத்தனர். அவர் கடவுள் தனக்குக் கொடுத்த திறமைகளை கடவுளுடைய மகிமைக்காகவே பயன்படுத்தினார். அடிக்கடி காட்சிகளைக் கண்டார். அதன்வழியாக அவர் இறைவனோடு உள்ள உறவில் மேலும் மேலும் வளர்ந்தார். பிலிப்புநேரி மக்களைப் பார்த்து அடிக்கடி கேட்கக்கூடிய வார்த்தை, 'இன்று ஏதாவது நன்மை செய்தீர்களா?' என்பதுதான். இப்படிக் கேட்பதன் வழியாக அவர் மக்களை நன்மை செய்யத் தூண்டினார். நன்மை செய்வதில் எப்பொழுதும் ஆர்வம் கொள்வோம்..

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.

**முக்கிய அம்சங்கள் :**

1. நேரமும் சூழலும்:
2. அவதானிப்பு:
3. மென்மை மற்றும் ஆதரவு:
4. குறிப்பிட்ட உதாரணங்கள்:
5. பதில் அளிப்பதற்கான இடம் .




**முக்கிய நோக்கம்**

1.சுய விழிப்புணர்வு

2.தடைகளை உடைத்தல்

3.பொறுப்பேற்றல்





# எதிர்கொள்ளுதல்

**'எதிர்கொள்ளுதல்' நுட்பங்கள்:**

1. கவனித்தல் (Observation)
2. சுட்டிக்காட்டுதல் (Pointing out)
3. விளைவை விளக்குதல் (Explaining Impact)



**எதிர்கொள்ளுதலின் வகைகள்:**

- சொற்களுக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாடு:
- கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான முரண்பாடு:

கடந்த பகுதியில் 'ஆலோசனையில் ஊக்குவித்தல்' என்ற நுண்திறனை பற்றி பார்த்தோம். இப்பகுதியில் ஆலோசனைத் துறையில் (Counselling) மிக முக்கியமான மற்றும் நுட்பமான ஒரு திறன் 'எதிர்கொள்ளுதல்' (Confrontation) பற்றி பார்போம்.

'எதிர்கொள்ளுதல்' (Confrontation):

ஆலோசனை என்பது ஒரு நபர் தனது சிக்கல்களைப் புரிந்து கொண்டு அதிலிருந்து மீள உதவும் ஒரு செயல்முறையாக எதிர்கொள்ளுதல் (Confrontation) என்பது ஆலோசனையைப் பெறுபவர் (Client) கூறும் தகவல்களில் உள்ள முரண்பாடுகள், தற்காப்பு மனப்பான்மை அல்லது தவறான நம்பிக்கைகளை ஆலோசகர் அவருக்குத் தெரியப்படுத்துவதாகும். இதில் 'எதிர்கொள்ளுதல்' என்பது ஒருவரைத் தண்டிப்பதோ அல்லது குறை கூறுவதோ அல்ல; மாறாக, ஒரு நபரின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை அவருக்கு மென்மையாகச் சுட்டிக்காட்டும் ஒரு நுட்பமாகும். உதாரணமாக, 'நான் என் மனைவியை நேசிக்கிறேன்' என்று கூறிக்கொண்டே, அவரைப் பற்றித் தொடர்ந்து கோபமாகப் பேசுவதை ஒரு ஆலோசகர் சுட்டிக்காட்டுவது 'எதிர்கொள்ளுதல்' ஆகும். ஆலோசனைத் துறையில் (Counselling) மிக முக்கியமான மற்றும் நுட்பமான ஒரு திறன் 'எதிர்கொள்ளுதல்' (Confrontation) ஆகும்.

**எதிர்கொள்ளுதலின் அவசியம்:**

ஒரு நபர் கலந்தாய்வுக்கு வரும்போது, அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளின் முழு பரிமாணத்தையும் அறிந்திருப்பதில்லை. சில சமயங்களில், அவர்கள் தாங்கள் சொல்லும் ஒரு கருத்துக்கும், அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை உணராமல் இருக்கலாம். உதாரணமாக, ஒருவர் 'நான் என் வேலையில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்று வாய்மொழியாகக் கூறிவிட்டு, அதே சமயம் ஆழ்ந்த சோர்வுடனும், நம்பிக்கையற்ற பார்வையுடனும் காணப்படலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கலந்தாய்வாளர் இந்த முரண்பாட்டை மென்மையாக சுட்டிக்காட்டி, 'நீங்கள்

மகிழ்ச்சியாக இருப்பதாகச் சொல்கிறீர்கள், ஆனால் உங்கள் முகத்தில் சோர்வு தென்படுகிறதே, இது பற்றி பேசலாமா?' என்று கேட்கலாம். இந்த அணுகுமுறை, கலந்தாய்வு பெறுபவர் தங்கள் உள்ளுணர்வுகளை ஆழமாக ஆராயத் தூண்டும்.
எதிர்கொள்ளுதல் திறன் கீழ்க்கண்ட சூழல்களில் பயனுள்ளதாக இருக்கும்:

✹ **முரண்பாடுகளை வெளிப்படுத்துதல்:** கலந்தாய்வு பெறுபவரின் வாய்மொழி மற்றும் உடல்மொழிக்கு இடையே உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுவது.

✹ **தவறான எண்ணங்களை திருத்துதல்:** யதார்த்தமற்ற நம்பிக்கைகள் அல்லது தவறான புரிதல்களை மென்மையாக எடுத்துரைத்தல்.

✹ **பொறுப்பை ஏற்றுக்கொள்ள வைத்தல்:** தங்கள் நடத்தையின் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கத் தயங்கும் நபர்களுக்கு சுய பொறுப்புணர்வை உருவாக்குதல்.

✹ **மறுப்புணர்வை உடைத்தல்:** சில சமயம் தனிநபர்கள் தங்களுடைய பிரச்சினைகளை ஒப்புக்கொள்ள மறுக்கலாம் (Denial). அத்தகைய மறுப்புணர்வை ஆதவுடன் எதிர்கொள்ளுதல், உண்மையை ஏற்றுக்கொள்ள உதவும்.

**எதிர்கொள்ளும் முறை:**

எதிர்கொள்ளுதல் என்பது கோபமாகவோ, குற்றவுணர்வுடன் கூடியதாகவோ இருக்கக்கூடாது. இது கலந்தாய்வு பெறுபவரின் நன்மை கருதி மிகவும் கவனமாகவும், ஆதரவாகவும் கையாளப்பட வேண்டும். ஒரு பயனுள்ள எதிர்கொள்ளுதலுக்குக் கீழ்க்கண்ட அம்சங்கள் முக்கியம்:

1. **நேரமும் சூழலும்:** கலந்தாய்வு பெறுபவர் மனதளவில் தயாராக இருக்கும்போது மட்டுமே எதிர்கொள்ளுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு இல்லாமல் இருக்கும்போது, அது மோதலாக மாறிவிடும்.
2. **அவதானிப்பு:** கலந்தாய்வாளர், கலந்தாய்வு பெறுபவரின் வாய்மொழி வெளிப்பாடுகள், உடல்மொழி, உணர்ச்சி நிலைகள் ஆகியவற்றை நுணுக்கமாக அவதானிக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும்.
3. **மென்மை மற்றும் ஆதரவு:** எதிர்கொள்ளும் தொனி பரிவானதாகவும், ஆதரவானதாகவும் இருக்க வேண்டும். 'நான் இந்த வித்தியாசத்தை கவனிக்கிறேன், இது பற்றிக் கொஞ்சம் பேசலாமா?' போன்ற அணுகுமுறை அதிக பலனளிக்கும்.
4. **குறிப்பிட்ட உதாரணங்கள்:** பொதுவான குற்றச்சாட்டுகளை வைப்பதற்குப் பதிலாக, குறிப்பிட்ட நடத்தைகளையோ, வார்த்தைகளையோ சுட்டிக்காட்டுவது முக்கியம்.
5. **பதில் அளிப்பதற்கான இடம்:** எதிர்கொண்ட பிறகு, கலந்தாய்வு பெறுபவர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த போதுமான இடமும் நேரமும் அளிக்கப்பட வேண்டும்.

எதிர்கொள்ளுதல் திறன், கலந்தாய்வின் போக்கை ஆழப்படுத்தி, கலந்தாய்வு பெறுபவருக்குத் தங்கள் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாற்றங்களைச் செய்ய உதவுகிறது. இந்தத் திறன், சரியான முறையில் பயன்படுத்தப்பட்டால், கலந்தாய்வு பெறுபவரின் சுய விழிப்புணர்வையும், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனையும்

மேம்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயல்படும். கலந்தாய்வாளர் இந்தத் திறனைப் பயன்படுத்தும்போது, அனுதாபத்துடனும், ஆழ்ந்த புரிதலுடனும் செயல்பட வேண்டும் என்பதே மிக முக்கியம்.

**எதிர்கொள்ளுதலின் முக்கிய நோக்கம்:**

1. **சுய விழிப்புணர்வு:** ஆலோசகர் சுட்டிக்காட்டும் போது, அந்த நபர் தான் என்ன செய்கிறோம் என்பதை உணரத் தொடங்குவார்.
2. **தடைகளை உடைத்தல்:** மாற்றத்திற்குத் தடையாக இருக்கும் பழைய எண்ணங்களை மாற்ற இது உதவுகிறது.
3. **பொறுப்பேற்றல்:** தனது பிரச்சனைகளுக்குத் தானே பொறுப்பு என்பதை உணரச் செய்கிறது.

**எதிர்கொள்ளுதலின் வகைகள்:**

✸ சொற்களுக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாடு: 'உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்கிறீர்கள், ஆனால் அதற்கான முயற்சியை எடுக்கவில்லையே?' எனச் சுட்டிக்காட்டுதல்.

✸ கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான முரண்பாடு: 'அன்று மிகவும் தைரியமாகப் பேசினீர்கள், இன்று ஏன் இவ்வளவு தயக்கம்?' எனக் கேட்டல்.

**கவனிக்க வேண்டியவை:**

எதிர்கொள்ளுதல் என்பது ஒரு 'ஆயுதம்' போன்றது. இதை மிகக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

✸ ஆலோசகருக்கும் அந்த நபருக்கும் இடையே ஒரு நல்ல புரிதல் (Rapport) ஏற்பட்ட பிறகுதான் இதைப் பயன்படுத்த வேண்டும்.

✸ குரல் தொனி மென்மையாக இருக்க வேண்டும். அது தாக்குவது போல் இருக்கக்கூடாது.

✸ அன்பு மற்றும் அக்கறையின் அடிப்படையில் மட்டுமே இது செய்யப்பட வேண்டும்.

எதிர்கொள்ளுதல் என்பது ஒரு கண்ணாடியைப் போன்றது. அது ஒரு நபரின் உண்மையான பிம்பத்தைக் காட்டி, அவரை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. சரியாகப் பயன்படுத்தப்படும்போது, இது ஒரு நபரின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டது.

நிஜ வாழ்க்கைச் சூழல்களில் (Real-life Scenarios), ஆலோசனை அமர்வில் 'எதிர்கொள்ளுதல்' (Confrontation) திறனை எப்படிக் கையாளலாம் என்பதற்கான சில பொருத்தமான உதாரணங்களை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

**அசை போட அரை நிமிடம் :**

"ஆறுதல் பெறுவோரின் முரண்பாடுகளை அக்கறையுடன் எதிர்கொள்வது ஆலோசனை அமர்வின் இலக்கை அடைய உதவும்"

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## என்னை மன்னியும்

✸ கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே பொழிந்தருளும்; உறுதி தரும் ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும் என்ற இறைவார்த்தை கற்பிக்கும் நெறியில் தூய உள்ளத்தோடு வாழத் தவறியமைக்காக இறைவா! என்னை மன்னியும் (திபா 51:10).

✸ கடவுளின் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்காதீர்கள் என்பதை மறந்து, என் சிந்தனை, சொல், செயல்களால் என்னுள் உறையும் தூய ஆவியாரைத் துயரப்படுத்தியமைக்காக இறைவா! என்னை மன்னியும் (எபே 4:30).

✸ விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி என்ற இயேசுவின் வார்த்தையின்படி தூய ஆவியாரையும். அவரது கொடைகளையும் விண்ணகத் தந்தையிடம் கேட்பதற்குப் பதிலாக உலக ஆசிரை மட்டும் கேட்பதில் நிறைவடைந்ததற்காக மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (லூக் 11:13).

✸ தூஆவியாரின் ஒன்பது கனிகளையும் வெளிப்படுத்தி சான்று வாழ்வு வாழாத தருணங்களுக்காக இறைவா! என்னை மன்னியும் (கலா 5:22-23).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

⊙ உணவின்றி பசியால் வாடும் ஏழைகளுக்கு உணவு கிடைப்பதை அரசுகள் உறுதி செய்ய

⊙ உணவு வீணாக்கப்படுவதை தவிர்க்க அனைவரும் இணைந்து செயல்பட

⊙ சட்டசபைத் தேர்தல் முடிந்து அமையப்பேகும் மாநில அரசுகள் மக்களின் நலன்களைப் பாதுகாக்க

⊙ ஈரன்-இஸ்ரயேல் நாடுகளுக்கிடையே நடைபெறும் போர் நிறுத்தப்பட்டு உலகில் அமைதி நிலவ

⊙ இந்தியாவில் மதச்சார்பின்பின்மையும், சனநாயகமும் பாதுகாக்கப்பட்டு அனைவரும் ஒற்றுமையுடன் வாழ

⊙ கோடை வெயிலில் மனிதர்களும். உயிரினங்களும் பாதுகாக்கப்பட

⊙ ஆவியானவர் பெருவிழாக் கொண்டாட்டம் திருஅவையில் நம்பிக்கை எழுச்சியை உருவாக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

➤ ஆவியானவர் பெருவிழா நவநாள்களை மே மாதம் 15 முதல் கடைப்பிடித்து கனிவாழ்வில் வளர்தல்.












படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **எபேசியர் 4-6 அதிகாரங்களுக்குள்**









**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com